# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் கனடாவிலுள்ள மிஸ்ஸிஸ்ஸவ்கா - மாநாட்டுத் திடலில் 06.07.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்ஹம்துலில்லாஹ். இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் கனடாவின் ஆண்டு மாநாடு ஆரம்பாகிறது. இந்த மாநாடுகள் ஓர் அஹ்மதிக்கு பரக்கத்துகளைப் பெறுவதற்குக் காரணமாக அமைகின்றது. அவ்வாறே அமையவும் வேண்டும். ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட சூழலில் மார்க்க நோக்கத்திற்காக மட்டும் ஒன்றுகூடுவது, இறைவனை நினைவு கூறுவதற்காக ஒன்றுகூடுவது, அவனுடைய விருப்பத்தை நினைவு கூறுவதற்காக ஒன்றுகூடுவது ஆகியவை நிச்சயமாக அல்லாஹ்வுடைய அருளை ஈர்க்கிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள். இறைவனுடைய விருப்பத்தினைப் பெறுவதற்காக ஏற்படுத்தப்படும் கூட்டங்கள் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாக்குகின்றது. அவனது சொர்க்கத்தின் பக்கம் அழைத்துச் செல்கின்றது.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களே! சொர்க்கத்தின் தோட்டங்களில் உலவுவதற்கு முயற்சி செய்யுங்கள். சஹாபாக்கள் சொர்க்கத்தின் தோட்டம் என்றால் என்ன? என்று வினவிய போது, பெருமானார் (ஸல்) அவர்கள், திக்ர் – இறைவனை நினைவு கூறக்கூடிய கூட்டங்கள் சொர்க்கத்தின் தோட்டங்கள் ஆகும் என்று கூறினார்கள்.

எனவே, எந்தக் கூட்டத்திலிருந்து சொர்க்கத்தின் தோட்டங்கள் கிடைக்குமோ நிச்சயமாக அது அருளுக்குரிய கூட்டமாகும். மேலும் நமது மாநாட்டின் நோக்கமும் இதுவே ஆகும். இறைவனுடைய விருப்பத்தினைப் பெறுவதற்கு, அல்லாஹ்வுடைய நேசத்தில் முன்னேறுவதற்குரிய விசயங்களைக் கேட்பதாகும். துஆ மற்றும் இபாதத்துகளின் பக்கம் கவனமும் இருக்க வேண்டும். மேலும் இதனைப் பெறுவதற்குரிய வழிகளையும் கற்க வேண்டும்.

இதைப் போன்று அல்லாஹ்வின் விருப்பத்தினைப் பெறுவதற்கு, அல்லாஹ்வின் அடியார்களுடைய உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். பிறகு இந்த நன்மையின் பக்கமும், உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கமும் இருக்கும் கவனம் நம்மை இறைவனுக்கு நன்றி செலுத்தக்கூடிய அடியார்களாக ஆக்கி, நமது நாவுகளை அவனது திக்ரில் ஈடுபடுத்தியவாறு சொர்க்கத்தின் தோட்டங்களின் பக்கம் வழிகாட்டும். அடியாரின் உரிமை நிறைவேற்றப்படும் போது, அந்த அடியார் தனக்குரிய உரிமைகள் யாவும் நிறைவேற்றப்படுவதைப் பார்க்கிறார். அதுவும் இந்தக் கூட்டங்களின் மூலமாக உரிமைகள் நிறைவேற்றப்படுவதைப் பார்க்கின்ற அவரும் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனுக்கு நன்றி கூறுகிறார்.

உண்மையான நம்பிக்கையாளர்களின் இத்தகைய கூட்டங்களும் அவர்களுக்கு இடையிலான பரஸ்பர தொடர்பு ஆகியவையே இறைவனுக்கு நன்றி செலுத்துவதன் அடையாளங்களாக இருக்க வேண்டும்.

எனவே, நம்மில் இந்த உணர்வுடன் இங்கு வரக்கூடியவர்கள், இதன்படி அமல் செய்யக்கூடியவர்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவார்கள். இதன் விளைவாக இவர்கள் தமக்காக சொர்க்கத்தின் தோட்டங்களை திறப்பது மட்டுமின்றி படைப்பினங்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றியதன் காரணத்தால், மற்றவர்களும் சொர்க்கத்தின் தோட்டங்களில் உலவுவதற்கு காரணமாக அமைகின்றார்கள். பிறகு மேலும் அதிக அளவு அருளுக்கு வழிவகுக்கின்றது. அல்லாஹ்வின் அருளை ஈர்க்கக்கூடிய மூஃமினாக ஆகிவிடுகின்றார். ஏனென்றால் மற்றவர்களுக்கு நன்மையின் வழியினை காண்பிக்கக்கூடியவர் அல்லது ஒருவருக்கு நன்மை செய்வது, அவரை இறைவனுக்கு நன்றி செலுத்துபவராக ஆக்குபவர், நன்மையை செய்தவர் பெறுகின்ற அதே அளவு நற்கூலியைத் தாமும் பெறுகிறார்.

இவ்வாறு ஒரு நன்மை, நல்ல விளைவின் காரணமாக பல மடங்கு நன்மையினைப் பெற்றுத் தந்து அல்லாஹ்வின் அருள் மற்றும் பரக்கத்திற்கு வாரிசாக்கிக் கொண்டே செல்கிறது.

எனவே இதுதான் நமது அன்பிற்குரிய இறைவன், அவன் நற்செயல்களுக்கு நூறு மடங்கு, ஆயிரம் மடங்கில் கனிகளைத் தருகிறான். தனது அடியானின் சாதாரண முயற்சியைக் கூட எந்த அளவு பெரிதாக்குகின்றான் என்றால் அது மனிதனின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றது. எனவே இந்த அன்பான இறைவனின் அன்பினை ஒவ்வொருவரும் தேட வேண்டும்.

நான் அடிக்கடி கூறுவது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாடுகளை அமைத்து நமக்கு அருளுக்குரிய வழிகளைத் திறந்துள்ளார்கள். சொர்க்கத்தின் தோட்டங்களில் உலவுவதற்கு ஒரு பெரிய மற்றும் சிறந்த ஒரு வழியினை ஏற்படுத்தியுள்ளார்கள்.

எனவே, நம்மில் இந்தக் கூட்டத்திலிருந்து, இந்த சூழலிலிருந்து பயன்பெற்று அல்லாஹ்வின் விருப்பத்தினை பெறக்கூடியவர்களாக ஆகக்கூடியவர்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவோம். எனவே அதற்காக அந்த விருப்பத்தினைப் பெறுவதற்காக இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறியவர், பெரியவர் ஆகிய அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். ஜமாஅத் சகோதரர்கள் இந்தத் தகுதியைப் பெறக்கூடியவர்களாக ஆக்குவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உள்ளத்தில் எவ்வளவு வேதனை இருந்தது! அன்னார் எந்த அளவு துடிப்புடன் இதற்காக துஆ செய்தார்கள்! அதனை இந்த வரிகளின் மூலம் நம்மால் உணர முடிகிறது.

கூறுகின்றார்கள்: துஆ செய்கின்றேன். வாழ்நாள் முழுவதும் செய்து கொண்டே இருப்பேன். மேலும் எனது துஆ இதுவாகும். அல்லாஹ்வே! என்னுடைய இந்த ஜமாஅத்தின் உள்ளங்களை தூய்மையாக்க வேண்டும். தனது ரஹ்மத்தின் கையை நீட்டி அவர்களது உள்ளங்களை தன் பக்கம் ஈர்ப்பானாக! எல்லா விதமான தீமைகள், தீய எண்ணங்கள் போன்றவற்றை அவர்களுடைய உள்ளங்களிலிருந்து அகற்றுவானாக! பரஸ்பரம் உண்மையான அன்பை ஏற்படுத்துவானாக! மேலும் நான் இந்த துஆ ஏதாவதொரு சமயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் என உறுதி கொள்கின்றேன். இறைவன் எனது துஆவை வீணாக்க மாட்டான்.

மேலும் நான் இவ்வாறும் துஆ செய்கின்றேன். அதாவது, எனது ஜமாஅத்தில் ஒருவன் அறிவு மற்றும் எண்ணத்தின்படி நிரந்தரமாக தீயவனாக இருக்கின்றான் என்றால், அவனுக்கு உண்மையான தூய்மை மற்றும் இறைபக்தி கிடைக்கப் பெறாது என்று இறைவன் அறிந்தால், வல்லமைமிக்க என் இறைவா! எவ்வாறு அவன் உன் புறமிருந்தும் அகற்றப்பட்டு இருக்கின்றானோ அவ்வாறே என்னிடமிருந்தும் அவனை அகற்றி விடுவாயாக! அவனுக்குப் பதிலாக மிருதுவான உள்ளம் கொண்ட உயிரில் உண்மையான தேடல் இருக்கக்கூடிய வேறொருவனை கொண்டு வருவாயாக!

இந்த வார்த்தைகள் அன்னாரின் உள வேதனையின் எப்படிப்பட்ட வெளிப்பாடுகள் என்றால் நமது உள்ளங்களை நடுங்க வைக்கக்கூடியதாக உள்ளது. புல்லரிக்க வைக்கிறது. தவ்பா மற்றும் இஸ்திஃபாரின் பக்கம் கவனமூட்டுகிறது. உண்மையில் இறைவன் முன்பு குனிந்தவாறு, இறைவனிடம் பாவமன்னிப்பு கேட்பவர்களாக நம்மை ஆக்குகிறது. அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டக்கூடியதாக இருக்கின்றது. எனவே இந்த நாட்களில் நம்மில் ஒவ்வொருவரும் தவ்பா, இஸ்திஃபார், ஸலவாத் மற்றும் திக்ரே இலாஹி ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அல்லாஹ் நமது ஈமானை பாதுகாக்க வைப்பது மட்டுமின்றி நமது ஈமான், நிச்சய உறுதி மற்றும் இறையச்சம் ஆகியவற்றில் முன்னேறக்கூடியவர்களாக ஆக்குவானாக! நமது பாவமன்னிப்பு தூய்மையான பாவமன்னிப்பாக ஆக வேண்டும். நமது தொழுகைகள், நமது இபாதத்துகள் உண்மையான தொழுகைகளாகவும், இபாதத்துகளாகவும் ஆக வேண்டும். நாம் அடியார்களுக்கு செலுத்தக்கூடிய உரிமைகள், தூய்மையான இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக அமைந்திருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த மேற்கோளை எப்பொழுதும் நம் முன் வைக்க வேண்டும்.

கூறுகின்றார்கள்: உள்ளம் தாழ்மையுடன் ஸஜ்தா செய்யாமல் வெறும் வெளிப்படையான சஜ்தாக்கள் மீது மட்டும் நம்பிக்கை வைப்பது வெறும் போலியான விருப்பம் ஆகும். அதாவது நாம் பெரிய பெரிய ஸஜ்தாக்கள் செய்கின்றோம். அல்லாஹ் நமது துஆக்களை ஏற்றுக் கொள்வான் என நினைப்பது தவறான எண்ணமாகும்.

கூறுகின்றார்கள்: குர்பானி உடைய இரத்தம் மற்றும் இறைச்சி ஆகியவை இறைவனிடம் சென்றடைவதில்லை. மாறாக, தக்வா மட்டுமே அவனிடம் சென்றடைகிறது. அதே போன்று உள்ளத்தால் ருகூ, ஸுஜூது மற்றும் கியாம் (நிற்றல்) செய்யாமல் வெறும் உடலளவிலான ருகூ, ஸுஜூது போன்றவைகள் ஒன்றுமற்றவையாகும்.

கூறுகின்றார்கள்: உள்ளத்தின் கியாம் (உள்ளத்தில் நிற்றல்) என்பது அவனுடைய கட்டளைகளின்படி செயல்படுவதாகும். ருகூ என்பது அவன் பக்கம் குனிவது, ஸுஜூது என்பது அவனிடம் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்து விடுவதாகும். எனவே, இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருப்பமாகும். நம்மிடம், தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம், தனது ஜமாஅத்திடம் தக்வாவின் தரத்தைப் பெற வேண்டும் என்பதற்காக மிகவும் வேதனையுடன் அவர்கள் துஆ செய்துள்ளார்கள். அல்லாஹ் நம்மை இந்தத் தரத்தைப் பெறக்கூடியவர்களாக ஆக்குவானாக! நாம் உலக வியாபாரங்களில் அதிகமாக ஈடுபட்டு தக்வாவிலிருந்து விலகிச் சென்றதன் காரணமாக, நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புரட்சிகரமான நோக்கத்தில் தடையை ஏற்படுத்தக் கூடியவர்களாக ஆகி விடக்கூடாது. நாம் இறைவனுக்குரிய உரிமை, படைப்பினங்களுக்குரிய உரிமையை அழிக்கக் கூடியவர்களாக ஆகி விடக்கூடாது. நாம் அன்னார் எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தோன்றினார்களோ அதிலிருந்து விலகி விடக்கூடியவர்களாகி விடக் கூடாது.

எனவே இந்த மாநாட்டின் அருளிலிருந்து முழுவதுமாக பயன் பெறுவதற்கு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருப்பங்கள், துஆக்களுக்கு வாரிசாவதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் ஒரு புதிய உணர்வுடன் இந்த உறுதிமொழி எடுக்க வேண்டும். இதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

நாம் நமது தக்வாவின் தரத்தை மேம்படுத்திக் கொண்டே செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். தக்வாவின் வழியினைத் தேடுவதில், குர்ஆன் நமக்கு கற்றுத் தந்துள்ள போதனைகள், உண்மையான மூஃமினின் தரமாக கூறியவற்றைத் தேடி, அதன்படி அமல் செய்தால் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்த்த அந்த தரத்தை நாம் அடைய முடியும்.

திருக்குர்ஆன் தக்வாவின்படி அமல் செய்வதற்கு பல்வேறு கோணங்களில், எண்ணற்ற இடங்களில் கவனமூட்டியுள்ளது. அதில் சிலவற்றை நான் இங்கு கூறுவேன். இதன் மூலம் நம்மில் ஒவ்வொருவருக்கும் தன்னை ஆராய்வதன் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: வணக்கத்திற்குரியவன் என்னைத் தவிர வேறு எவனும் இல்லை. எனவே, எனக்கே அஞ்சுங்கள். (16:3)

தக்வாவின் பொருள், பாதுகாப்பிற்காக கேடயத்தின் பின்பு வருதல் என்பதாகும். பாவங்களிலிருந்து தப்பிப்பதற்குரிய செயல்களைச் செய்வதும் கஷ்டங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் ஆகும்.

எனவே இறைவன் கூறுகின்றான்: எனது இபாதத், அதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு செய்தீர்கள் என்றால், இதுதான் தக்வா ஆகும். இது எல்லா பகுதியிலிருந்தும் உங்களை பாதுகாக்கும். உங்களை பாவங்களிலிருந்த காப்பாற்றும். உங்களை கஷ்டங்களிலிருந்த காப்பாற்றும். இறைவனுடைய இபாதத் அதன் உரிமையுடன் செய்யும் போது இறைவனது அச்சம், பயத்தினை ஏற்படுத்தக்கூடிய இடம் இதுவாகும் என்பதை நன்றாக விளங்கிக் கொள்ளுங்கள். ஆனால் இந்த அச்சம் உண்மையான அடியான், உண்மையான மூஃமின் இறைவனுடன் கொண்டுள்ள அன்பின் காரணத்தினால் ஆகும். இதனை மற்றொரு வகையில் தக்வா என்று கூறுகின்றோம்.

எனவே ஓர் உண்மையான அஹ்மதி இந்த இபாதத்துகளின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் தக்வாவின்படி செல்லக் கூடியவர்; இறைவனது விருப்பத்தைப் பெறக் கூடியவர் எனக் கூற முடியும். மேலும் இதுவே மனிதப் படைப்பின் மாபெரும் நோக்கமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பல இயல்புகளைக் கொண்ட மனிதர்கள் தமது அறிவின்மை அல்லது தைரியக் குறைவின் காரணத்தால் பல்வேறு குறிக்கோள்களை தமது வாழ்விற்காக அமைத்துக் கொள்கிறார்கள்.

நாம் பார்க்கின்றோம். இன்று மட்டுமல்ல. எப்போதுமே இதுதான் நடந்து வருகிறது. மனிதன் தனது வாழ்வின் குறிக்கோள்களைத் தானே ஏற்படுத்துகின்றான். நான் இதனை குறிக்கோளாகக் கொண்டுள்ளேன். இதுதான் எனது வெற்றியின் இரகசியம் என எண்ணுகிறான். மேலும் இறைவன் மனிதப் படைப்பின் நோக்கமாகக் கூறிய அந்தக் குறிக்கோளை மறந்து விடுகின்றான்.

கூறுகின்றார்கள்: தைரியமில்லாமல் தனது வாழ்க்கைக்காக மனிதர்கள் குறிக்கோள்களை ஏற்படுத்துகின்றனர். வெறும் உலக குறிக்கோள்கள், விருப்பங்கள் வரை சென்று அவர்கள் நின்று விடுகிறார்கள். ஆனால் இறைவன் தனது தூய வேதத்தில் கூறிய அந்தக் குறிக்கோள் இதுவாகும். நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை கண்டறியவும், எனக்கு இபாதத் செய்யவும் தான் படைத்திருக்கின்றேன்.

இந்த வசனத்திலிருந்து மனிதனது வாழ்வின் நோக்கம் இறைவனை வணங்குவது, இறைவனைப் பற்றி அறிவைப் பெறுவது, இறைவனுக்காகவே ஆகி விடுவதும் ஆகும். தனது வாழ்வின் குறிக்கோளை தானே நிர்ணயிக்கும் தகுதி மனிதனிடம் இல்லை என்பது வெளிப்படையாகும். ஏனென்றால் மனிதன் தனது விருப்பப்படி வருவதும் இல்லை. அவனது விருப்பப்படி திரும்பிச் செல்லவும் முடியாது. மாறாக அவன் ஒரு படைப்பு ஆவான். எவன் படைத்தானோ, அனைத்து உயிரினங்களையும் விட உயர்வான, சிறப்பான ஆற்றலை வழங்கி இருக்கின்றானோ அவன், இவனது வாழ்வின் ஒரு நோக்கத்தினை நிர்ணயித்து வைத்திருக்கின்றான்.

மனிதன் அந்த நோக்கத்தை புரிந்தாலும் சரியே! புரியா விட்டாலும் சரியே! ஆனால் மனிதப் படைப்பின் நோக்கம் சந்தேகமில்லாமல் இறைவனை வணங்குவது, இறைவனைப் பற்றி அறிவைப் பெறுவது இறைவனிடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து விடுவதே ஆகும். எனவே இதுதான் அந்த தரமும், தன்மையும் ஆகும். இதனை ஒவ்வொரு அஹ்மதியும் பெற வேண்டும். இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மனிதன் எதனை வேண்டுமென்றாலும் தனது நோக்கமாக ஆக்கிக் கொள்ளட்டும். அதனைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்யட்டும். அது அவனது அர்த்தமற்ற வாழ்வாகும். இன்றைய நாட்களில் தனது நிம்மதிக்காக, இதுபோன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உலகில் குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் எண்ணற்ற வழிமுறைகள் கண்டுபிடிக்க மனிதன் முயற்சி செய்கின்றான். இதனுடைய முடிவு வெட்கங்கெட்ட தன்மை ஆகும். மனிதனுடைய கண்ணியமும் எந்த அளவு வீழ்ந்துள்ளதென்றால், எல்லா விதமான வெட்கங்கெட்ட வீணானவற்றை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துகின்றனர். மேலும் டி.வி.யில் காட்டுவதையும் வெட்கங்கெட்ட தன்மையாக கருதுவதில்லை. மேலும் சில நடைமுறைகள் விலங்குகளை விட மிக மோசமானதாக இருக்கின்றது. இந்த செயலுக்கு கேலி என்றும் அமைதியென்றும் பெயர் சூட்டப்படுகின்றது.

**இந்த நிலையைப் பற்றி அல்லாஹ் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:**

*நிச்சயமாக நான் படைத்த ஜின்கள் மற்றும் மனிதர்களில் பெரும்பாலனவரின் முடிவு நரகமாயிற்று. (ஏனெனில்) அவர்களுக்கு உள்ளங்கள் இருந்தும் அவற்றால் அவர்கள் புரிந்து கொள்வதில்லை. மேலும் அவர்களுக்குக் கண்கள் இருந்தும் அவற்றால் அவர்கள் பார்ப்பதில்லை. மேலும் அவர்களுக்குக் காதுகள் இருந்தும் அவற்றால் அவர்கள் கேட்பதில்லை. அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்களாவர்; இல்லை. அவர்கள் அவற்றை விடவும் மிக்க கெட்டவர்கள். உண்மையில் அவர்கள் முற்றிலும் கவனமற்றவர்களே ஆவர். **(7:180)***

நிச்சயமாக நாம் ஜின்களிலிருந்தும் மனிதர்களிலிருந்தும் ஒரு பெரிய எண்ணிக்கையை நரகத்திற்காக படைத்திருக்கின்றோம். அவர்களுக்கு உள்ளம் இருக்கின்றது. ஆனால் அவர்கள் அதன் மூலம் புரிந்து கொள்வதில்லை. அதாவது ஆன்மிக விசயங்களைப் புரிவதற்கு தகுதியே இல்லை. அவர்களுக்கு கண்கள் உள்ளன. ஆனால் அவர்கள் அதன் மூலம் பார்ப்பதில்லை. அவர்களுக்கு காதுகள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் அதன் மூலம் கேட்பதில்லை. அவர்களுடைய உள்ளத்தில் ஆன்மீகம் தங்குவதுமில்லை. அவர்களது

காதுகள் ஆன்மீக, மார்க்க விசயங்களைக் கேட்பதற்கு தயாராக இல்லை. நல்ல விசயங்கள் மற்றும் இறைவன் எந்த விசயங்களின் பக்கம் இறைவன் பார்க்க கூறியிருக்கின்றானோ அதன் பக்கம் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. மேலும் அவர்கள் இறைவன் எதிலிருந்து தடுத்திருக்கின்றானோ அதிலிருந்து தவிர்ந்திருப்பதில்லை. முழுமையாக உலக ஆசைகள் அவர்கள் மீது வெற்றி கொண்டு விட்டது.

கூறுகின்றார்கள்: அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள் ஆவர். மாறாக அதனை விட மோசமானவர்கள் ஆவர். வழிதவறியுள்ளார்கள். இவர்கள் தான் கவனமற்றவர்கள் ஆவர்.

பிறகு மற்றோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: *தமது தீய இச்சைகளை தமது கடவுளாக ஆக்கிக் கொண்டவரது நிலையை நீர் காணவில்லையா? (25:44)*

இவர்கள் தனது விருப்பங்களை வணங்கக்கூடிய மக்கள் ஆவார்கள்.

மேலும் கூறுகின்றான்: *அவர்களுள் பெரும்பாலானவர்கள் செவியேற்கின்றனர் அல்லது உணர்கின்றனர் என்று நீர் கருதுகின்றீரா? அவர்கள் விலங்குகளைப் போன்றவர்களேயாவர். மாறாக நடைமுறையைப் பொருத்தவரை அவர்கள் அவற்றை விடவும் மிகக் கெட்டவர்களாவர். (25:45)*

எனவே, இந்த வசனங்களில், தனது படைப்பின் நோக்கத்தைப் புரியாத, தனது விருப்பங்களின் பின்செல்லக் கூடியவர்களின் தோற்றம் வரையப்பட்டுள்ளது. எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்களோ, எவன் படைத்து, பிறகு படைத்ததன் நோக்கத்தை கூறினானோ அவனை மறந்து விட்டார்கள். ஆனால் தனது நோக்கங்களை தானே தேடுகின்றார்கள். இப்படிப்பட்டவர்களின் தங்குமிடம் நரகம் ஆகும். விலங்குகளுக்கு அவைகளுடைய செயலுக்கு கேள்வி கணக்கு கிடையாது. இந்த வழி தவறியவர்களுடைய கேள்வி கணக்கு நிச்சயமாக அவர்களை நரகத்திற்கு கொண்டு செல்லும். இங்கு இந்த விசயத்தை தெளிவுபடுத்துகின்றேன். அல்லாஹ், நாம் பெரிய எண்ணிக்கையை நரகத்திற்காக படைத்துள்ளோம் என்று கூறியிருக்கின்றான் என்பதில் எந்தவிதமான தப்பெண்ணமும் கொள்ள வேண்டாம். இறைவனது வார்த்தையில் (நவூதுபில்லாஹ்) முரண்பாடு இருக்க முடியுமா?

அதாவது, ஒருபுறம் நாம் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காக படைத்துள்ளோம் என்றும், மறுபுறம் நரகத்திற்காக படைத்துள்ளேன் என்கிறான். இதன் பொருள் என்னவென்றால், இறைவன் புறமிருந்து நேர்வழி இருந்தும், இறைவனுடைய ரஹ்மத் பரந்து விரிந்திருந்தும் பெரும்பாலர் இதிலிருந்து பலன் பெறுவதில்லை. மேலும் அல்லாஹ்வை வணங்கி இம்மை, மறுமையை பிரகாசிக்க வழி வகை செய்வதில்லை. இதற்கு மாற்றமாக தனது விருப்பங்களைப் பின்பற்றி நரகத்திற்கான பாதையில் செல்கின்றனர்.

அகராதி வல்லுனர்கள் இதற்கு இவ்வாறும் விளக்கம் தருகின்றனர். அதாவது, ஜஹன்னம் (நரகம்) என்ற வார்த்தைக்கு முன்னால் லிஜஹன்னம் என வந்துள்ளது. லாம் கூடுதலாக வந்துள்ளது. இவ்வாறு வந்திருப்பது அவர்களின் முடிவைக் குறிக்கிறது. அவர்களின் நோக்கத்தை அல்ல. தனது மோசமான விளைவை, மனிதன் இறைவனிடம் இருந்து தூரம் விலகிச் சென்று, அவனது இபாதத்தின் உரிமையை நிறைவேற்றாமல், அவனது கட்டளைக்கு கட்டுப்படாததினால் அடைகின்றான்.

நான் கூறியது போன்று, இன்றைய நாட்களில் தனது வீணான விருப்பங்கள் மனிதனை இந்த முடிவை அடையச் செய்துள்ளது. விலங்குகளை விட மோசமான செயல்களை மனிதன் செய்ய ஆரம்பித்து விட்டான். வெளிப்படையாக ஒழுக்கங்கெட்ட செயல்கள் நடக்கின்றன. அசிங்கமான நிர்வாணமான செயல் பார்க்கப்படுகின்றது; செய்யப்படுகின்றது. போனோகிராபி உடைய ஃபிலிம்கள், வீடியோக்கள் மிகவும் சாதாரணமாக கிடைக்கின்றது. இப்படிப்பட்ட செயல்களைச் செய்யக்கூடிய இவர்கள், இதனைப் பார்த்து விலங்குகளை விடவும் மோசமாக ஆகி விட்டனர்.

நான் மிகவும் வருத்தத்துடன் கூறுகின்றேன். சில புகார்கள் என்னிடமும் வருகின்றது. நமது அஹ்மதி இளைஞர்கள், மேலும் நடுத்தர வயதை உடையவர்கள் இப்படிப்பட்ட வீணான அல்லது இதனை விட குறைவான வீணான ஃபிலிம்களைப் பார்ப்பதில் மூழ்கியிருக்கிறார்கள். இதன் காரணமாக சில குடும்பங்கள் சீரழிந்து

போகின்றன. எனவே ஒவ்வொருவரும் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். அல்லாஹ் தெளிவாகக் கூறிவிட்டான். இப்படிப்பட்ட வழி தவறிய மக்களின் தங்குமிடம் நரகமாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்:**

என்னுடன் இருக்க வேண்டும் என்றால் இந்த வீணான தனது சொந்த விருப்பங்களை விட்டு விடுங்கள். இல்லையென்றால் என்னை விட்டு விலகி விடுங்கள்.

பொதுவாக இப்படிப்பட்ட மக்கள் மாநாடுகளுக்கு வருவதேயில்லை. ஜமாஅத்திலிருந்து தூரம் விலகியேதான் இருப்பார்கள். ஒருவேளை வந்தால் அல்லது அவர்களது காது வரை இந்த விசயங்கள் சென்றடைந்தால் அல்லது அவர்களது அன்பர்கள் வரைக்கும் இதனை கொண்டு சேர்த்தால், அப்படிப்பட்ட மக்கள் தன்னை சீர்திருத்த முயற்சி செய்ய வேண்டும் அல்லது அவர் மீது ஜமாஅத் அமைப்பு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் அவர் தானாகவே ஜமாஅத்தை விட்டு பிரிந்து விட வேண்டும்.

இதனைப் போன்று இளைஞர்களுக்கு இளமைப் பருவத்தின் நுழையக் கூடியவர்கள், சரி எது? தவறு எது? என சரியாக பிரித்தறிய முடியாதவர்கள், வீட்டில் உள்ளவர்களும் சரியாக அவர்களுக்கு கூறியிருக்க மாட்டார்கள். ஜமாஅத் அமைப்புடனும் அந்த அளவு தொடர்பு கொண்டிருக்க மாட்டார்கள். அவர்களிடமும் நான் கூறுகின்றேன். இதுவும் அதாவது வீணானவற்றைப் பார்ப்பதும் ஃபிலிம் போன்றவற்றைப் பார்ப்பதும் ஒருவகையான போதையாகும். ஆகையால் இப்படிப்பட்ட வீணானவற்றில் ஈடுபடக்கூடியவர்களுடன் நட்பு கொள்ளாதீர்கள். ஏனென்றால் இவர்கள் உங்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுவார்கள். ஒருமுறை ஏதாவது அசிங்கம் அல்லது ஏதாவது அசிங்கத்தில் மூழ்கினாலும் பிறகு அதிலிருந்து வெளிவருவது கடினமானதாகி விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கம் எழுதியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இறைவன், நாம் நரகத்திற்கென்று பெரும்பாலான ஜின்களையும், மனிதர்களையும் படைத்துள்ளோம் என்று கூறுகின்றான்.

பிறகு கூறுகின்றார்கள்: அந்த நரகத்தை அவன் தானே உருவாக்கிக் கொள்கிறான். அல்லாஹ் நரகத்தினை ஏற்படுத்தவில்லை. மாறாக, அவர்களே தமது நரகத்தினை ஏற்படுத்திக் கொண்டனர்.

கூறுகின்றார்கள்: சொர்க்கத்தின் பக்கம் அழைக்கும் போது, தூய்மையான உள்ளத்துடன, தூய்மையான விசயங்களைக் கேட்பான். ஆனால் தூய்மையற்ற எண்ணங்களை கொண்டுள்ள மனிதன் தனது குறைவான அறிவின்படி அமல் செய்வான். சொர்க்கத்தின் பக்கம் அழைக்கும் போது அவர்கள் கேட்பதில்லை. தூய்மையான உள்ளம் கொண்டவர்கள் அவர்களுக்கு தூய்மையான விசயத்தின் தாக்கம் ஏற்படுகின்றது. ஆனால் தன்னைத் தானே அறிவாளி எனக் கருதக்கூடியவர்கள், உலக ஒளியிலிருந்து பலன் பெற வேண்டும் எனக் கூறுகின்றார்கள். தனது அறிவையே மேலானதாகக் கருதுகின்றார்கள். அவர்களுடைய முடிவு நரகமாகும்.

கூறுகின்றார்கள்: இப்படிப்பட்டவர்களுக்கு மறுமையிலும் நரகம் கிடைக்கும். மேலும் உலகத்தின் நரகமும் கிடைக்கும். உலகத்தின் நரகம் என்பது தூய்மையற்ற வாழ்வும், மற்றவர்களுக்கு காண்பிப்பதற்காக வாழ்வதும் ஆகும். உலகத்தின் நரகம் மறுமையின் நரகத்திற்கு ஓர் ஆதாரமாகவும், ஓர் அடையாளமாகவும் இருக்கும். சிலருக்கு சில நோய்களின் காரணமாகவும், சிலருக்கு வேறு வகையிலும் இவ்வுலகில் ஓர் நரகமாகத் தென்படும்.

**உலகத்தின் நரகத்தினைப் பற்றி விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:**

வெளிப்படையான செல்வம், ஆட்சி, கண்ணியம், அதிக அளவு பிள்ளைகள், எந்தவொரு மனிதனுக்கும் அமைதி மற்றும் நிம்மதி கிடைப்பதற்கு காரணமாக அமையும் என ஒருபோதும் கருதாதீர்கள். நிரந்தரமான அந்த நிம்மதி, அந்த அமைதி, அந்த திருப்தி போன்ற சொர்க்கத்தின் அருள்கள் இந்த விசயங்கள் மூலம்

கிடைக்கப் பெறாது. அது இறைவனுக்காக வாழ்வதிலும் இறைவனுக்காக மரணிப்பதிலும் தான் கிடைக்கப் பெறும்.

கூறுகின்றார்கள்: உலக இன்பம் ஒருவகையான தூய்மையற்ற ஒரு இச்சையை ஏற்படுத்தி, தேவை மற்றும் தாகத்தை அதிகப்படுத்துகிறது. அதிகமாக தண்ணீர் குடிக்கும் தேவை உடையவரைப் போன்று தாகம் தீராது. அதாவது தாகம் தீராத நோயைப் போன்று அவரது தாகம் தீராது.

கூறுகின்றார்கள்: எந்த அளவுக்கென்றால், அவர்கள் அழிந்துபோய் விடுவார்கள். எனவே, இந்த வீணான விருப்பங்களின் பேராசைகளின் நெருப்பு மேற்குறிப்பிட்ட நரகத்தின் நெருப்பாகும். இது மனிதனின் உள்ளத்தை நிம்மதி, அமைதியைப் பெறச் செய்யாது. மாறாக, ஒரு வேதனை, துடிப்புடன் நிம்மதியற்ற நிலையில் வைத்திருக்கும். எனவே, எனது நண்பர்களின் பார்வையிலிருந்து இது ஒருபோதும் மறைந்திருக்கக் கூடாது. அதாவது இந்த விசயங்களை கவனத்தில் கொள்ளுங்கள்.

கூறுகின்றார்கள்: இந்த நெருப்பு மனிதனின் உள்ளத்தை எரித்து சுட்ட கரியாக்கி விடுகிறது. எரித்த கரிக்கட்டையை விட கருப்பாக மாற்றி விடுகின்றது. இது அல்லாஹ் அல்லாத மற்றவையின் மீது கொண்ட அன்பு ஆகும். எனவே, உண்மையான மூஃமினுக்கு, தக்வாவின்படி செல்லக் கூடியவர்களுக்கு, தக்வாவை தேடக் கூடியவர்களுக்கு தன்னுடைய ஒவ்வொரு அமலையும் முற்றிலும் இறைவனுக்காக செய்ய வேண்டும்.

உள்ளத்திலிருந்து ஆசைகளையும், பெயரளவில் உள்ள அமைதியையும், உலகின் சிலைகளையும் வெளியில் எடுத்து எறிய வேண்டும். அப்போதுதான் ஒரு நம்பிக்கையாளர் உண்மையான நம்பிக்கையாளராக ஆக முடியும். இந்த சீர்திருத்தத்திற்காக அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுத்த இந்த நாட்களில் ஒவ்வொருவரும் தனது சீர்திருத்தத்திற்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மனிதன் மிகவும் மோசமான தீமைகளில் மூழ்கியிருக்கிறான் என்பது கட்டாயமில்லை. மாறாக சின்னச் சின்ன தீமைகளையும் களைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த சின்னச்சின்ன தீமைகள் தான் சில சமயங்களில் தக்வாவை விட்டு தூர விலகி விடுகின்றது. மேலும் தீமைகளில் ஈடுபடச் செய்கின்றது.

திக்ரே இலாஹி – இறைவனை நினைவு கூர்வதில் அதிகமாக ஈடுபடுங்கள். இஸ்திக்ஃபார் மற்றும் ஸலவாத் மூலம் அல்லாஹ்வுடைய நெருக்கத்தைப் பெற முயற்சி செய்யுங்கள். தனது உள்ளங்களை அல்லாஹ் அல்லாத மற்றவைகளிடமிருந்து தூய்மையாக்குங்கள். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக்கூடிய அடியாராக ஆகுங்கள். இந்த நன்றி செலுத்துதல் இறைவனுடைய நேசத்தை ஈர்ப்பதற்கு வழியாக அமைகின்றது.

இந்த நாட்டிற்கு வந்த பிறகு உலகளவில் திறந்திருக்கக்கூடிய அல்லாஹ்வின் அருளின் வாசல்களை, அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவதற்கு வழியாக்குங்கள். இறைவனுடைய கோபத்தினைப் பெறுவதற்குரியதாக ஆக்காதீர்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: உங்களுடைய தக்வா உங்களுக்கு கண்ணியத்திற்கு உரியதாகும். உங்களது பணம், உங்களது செல்வம் போன்றவை உங்களுக்கு கண்ணியத்திற்குரியது என்று கூறவில்லை.

அல்லாஹ் கூறுகின்றான்: இறைவனின் பார்வையில் மிகவும் அதிக கண்ணியத்திற்குரியவர் உங்களில் அதிக அளவு தக்வாவை மேற்கொள்பவரே ஆவார்.

நாம் அதிக அளவு இதனை கேட்டிருக்கின்றோம். நமது சொற்பொழிவுகளில் அதிக அளவு இதனைப் பற்றி கூறப்படுகிறது. பேச்சாளர்கள் இதனைக் கூறுவார்கள். ஆனால் அதன் மீது எவ்வாறு அமல் செய்ய வேண்டுமோ அவ்வாறு செய்யப்படுவதில்லை. அவ்வாறு அமல் செய்யப்பட்டால் ஜமாஅத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு வகையான பிரச்சனைகள், சண்டைகள் தானாகவே சரியாகி விடும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருவர் எந்த அளவு தக்வாவின் மிகவும் நுண்ணிய வழிகளைக் கையாளுவாரோ அதே அளவு இறைவன் பார்வையில் அவருக்கு மேன்மை இருக்கும்.

சந்தேகமின்றி இது மிகவும் உயர்ந்த தக்வா ஆகும். எனவே, ஆபத்துகள் வருவதற்கு முன்பே பாதுகாப்பாக இருப்பதற்கான வழிமுறைகள் கையாள வேண்டும். உலகத்தைப் பெறுவதனால் எவரும் மதிப்பிற்குரியவராகவும் கண்ணியத்திற்கு உரியவராகவும் ஆகமாட்டார். இறைவனிடத்தில் மிகப்பெரியவர் இறை பக்தி உடையவரே ஆவார்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: மார்க்கத்தில் பலவீனர்களாக இருக்கக் கூடியவர்களை ஏளனத்துடன் பார்க்காதீர்கள். செல்வம், குடும்பம் போன்றவற்றில் வீணான பெருமை அடித்து மற்றவர்களை இழிவாகவும், ஏளனமாகவும் பார்க்காதீர்கள். இறைவனிடத்தில் கண்ணியத்திற்கு உரியவர் முத்தகியே ஆவார்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: இரட்சிப்பு என்பது சமுதாயத்தையோ செல்வத்தையோ சார்ந்தது இல்லை. மாறாக, அல்லாஹ்வுடைய செயல் மீது தான் அது சார்ந்திருக்கிறது. இதனைப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

நன்னடத்தை, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுதல், துஆக்கள் போன்றவைகள் இறைவனது செயலை ஈர்க்கின்றன. பிறகு ஓரிடத்தில் மிகவும் கடினமாக எச்சரிக்கை செய்துள்ளார்கள். வார்த்தைகள் மிகவும் கடினமானதாகும்.

அல்லாஹ்வுடைய பார்வையில் முத்தகியாக இருக்கக் கூடியவர்தான் மதிப்பிற்குரியவரும், கண்ணியத்திற்குரியவரும் ஆவர். தற்போது முத்தகி ஆக இருக்கக் கூடிய ஜமாஅத் இறைவன் வைத்திருப்பான். மற்றவற்றை அழித்து விடுவான். இது மிகவும் நுட்பமான இடமாகும். அந்த இடத்தில் இருவர் நிற்க முடியாது. முத்தகியும் அங்கேயே இருப்பார்; தீயவனும் தூய்மையற்றவனும் அங்கேயே இருப்பார் என்பது கிடையாது. கண்டிப்பாக முத்தகி அங்கு நிற்பார். தீயவன் அழிக்கப்படுவான். யார் முத்தகி என்பதைப் பற்றிய அறிவு இறைவனுக்கு இருக்கின்றது. இது மிகவும் நுட்பமான இடமாகும்.

முத்தகி உடைய மனிதன் அதிர்ஷ்டசாலி ஆவான். சாபத்தின் கீழ் வந்தவன் தீயவன் ஆவான். எனவே நான் படித்த இந்த அனைத்து மேற்கோள்களும் ஓர் உண்மையான அஹ்மதிக்கு ஆராய்வதற்கு போதுமானதாகும்.

அன்னார் கூறினார்கள்: ஆபத்துகள் வருவதற்கு முன்னர் அந்த ஆபத்துகளிலிருந்து தவிர்ந்து இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். ஆபத்துகளிலிருந்து தவிர்ந்திருப்பது என்பது இதுவேயாகும். அதாவது தனது ஒவ்வொரு சொல்லும் செயலும் இறைவனுடைய விருப்பத்தினைப் பெறக் கூடியதாக ஆக்க வேண்டும். இதன் மூலம் மனிதன் வெற்றி அடைந்த மனிதர்களின் பட்டியலில் சேர வேண்டும்.

இந்தப் பட்டியலில் சேர்வதற்கு மூன்று வழிகளை அன்னார் கூறியுள்ளார்கள்:

முதலாவது, நல்ல அமல்களைச் செய்வது. நல்ல அமல்களின் விளக்கம் என்னவென்றால், இரண்டாவது உங்களுடைய ஒவ்வொரு அடியும் நன்மை பெறக்கூடியதாக இருக்க வேண்டும். பிறகு, நல்ல அமல்களின் அடையாளம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது முன்மாதிரியிலிருந்து கிடைக்கக் கூடியதைப் பார்க்க வேண்டும். அது அங்கிருந்து கிடைக்கும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது முன்மாதிரியைப் பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், பெருமானார் உடைய நடைமுறைகள் குர்ஆன் கரீம் ஆகும் என்று கூறினார்கள். எனவே திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுங்கள். அப்போது நல் அமல்கள் கிடைக்கப்பெறும். பிறகு தனது அமல்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது சுன்னத்தின்படி ஆக்கி, இறைவன் முன்பு குனிந்தவாறு துஆக்கள் மூலம் மேலும் அழகுபடுத்துங்கள்.

கூறுகின்றார்கள்: இந்த ஜமாஅத்தின் நியதியில் வெற்றி உள்ளது. இவர்கள் தான் தக்வாவின்படி அமல் செய்யக் கூடியவர்கள் ஆவார்கள். இவர்கள்தான் உலகில் வெற்றி அடைவார்கள்.

எனவே நம்மில் இந்த நோக்கத்தினை புரியக்கூடியவர், இந்த விசயத்தினை புரியக் கூடியவர் அதிர்ஷ்டசாலி ஆவார். இந்த அடிப்படை விசயத்தைப் புரிய வேண்டும். உலக செல்வங்களுக்கு முக்கியத்துவம்

வழங்காதீர்கள். இறைவனுடைய விருப்பத்தினை பெறுவது மற்றும் தக்வாவினைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

இறை அருளால் அஹ்மதிகளில் பெரும் எண்ணிக்கை இதற்காக முயற்சிகளை மேற்கொள்கிறது. இதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இதனுடைய வெளிப்பாடு ஜமாஅத் சகோதரர்களில் பழக்கவழக்கம், அவர்களுடைய தியாகங்களின் தரத்தின் மூலம் தெரிகிறது. ஆனால் இந்த மைதானத்தில் இன்னும் நிறைய முன்னேற வேண்டிய அவசியம் உள்ளது.

இறைவன் நம்மில் ஒவ்வொருவருக்கும் இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! நாம் இந்த முக்கியமான விசயத்தை புரியக்கூடியவர்களாக வேண்டும். தக்வாவின் கீழ் தமது வாழ்வை கழிக்கக் கூடியவர்களாக ஆவோமாக!

மேலும் அல்லாஹ் ஒரு முத்தகீயிடம் செய்த வாக்குறுதியிலிருந்து பங்குபெறக் கூடியவர்களாக ஆவோமாக! அல்லாஹ் பல்வேறு வாக்குறுதிகளுடன் முத்தகீகளுடன் இந்த வாக்குறுதியினையும் தந்துள்ளான். முத்தகீன்களுக்கே இறுதி வெற்றி உண்டு. அதாவது வெற்றி மற்றும் நல்ல முடிவு முத்தகீன்களுக்கே உரியதாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எல்லா விதமான பொறாமை, தப்பெண்ணம், புறம் பேசுதல், கர்வம் மற்றும் தீமைகள் போன்றவற்றின் வெளிப்படையான, மறைமுகமான வழிகளிலிருந்தும், சோம்பேறித்தனம், கவனமின்மை போன்றவற்றிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுங்கள். மேலும் இறுதி முடிவு முத்தகீன்களுக்குரியது தான் என்பதனை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்.

இதனைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: முத்தகீ ஆவதற்கு முயற்சி செய்யுங்கள்.

எனவே இந்த மாநாட்டுச் சூழல் நமக்கு கிடைத்திருக்கின்றது. இதிலிருந்து பலன் அடைந்தவாறு, நம்மில் ஒவ்வொருவரும் தனது தீமைகளின் மீது கவனம் செலுத்தியவாறு, எல்லா விதமான தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் எல்லா விதமான நன்மைகளையும் மேற்கொள்வதற்கு முழுமையாக கவனம் செலுத்த வேண்டும். இதிலிருந்து நாம் வெற்றியின் மூலம் இறைவனது விருப்பத்தினைப் பெற்றுத் தரக்கூடிய முடிவை பெறக் கூடியவர்களாக வேண்டும். பிறகு தனிப்பட்ட முடிவில் மட்டும் இறைவன் நிறுத்தி விடவில்லை. ஜமாஅத்தார்கள் இவ்வளவு பெரிய ஜமாஅத்தாக முழு முயற்சியுடன் நன்மையினை மேற்கொள்ளும் போது, தக்வாவின்படி செயல்பட முயற்சி செய்யும் போது, ஜமாஅத் என்ற ரீதியில் இறைவனுடைய ஜமாஅத் மீதான அருளின் மழையை இன்னும் அதிகமாக்கும். இறைவனது அருள் அதிகமாகிக் கொண்டே செல்லும்.

மேலும் இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் செய்த அந்த வாக்குறுதிகள் நமது வாழ்வில் நிறைவேறுவதனை நாம் பார்ப்போம். நிச்சயமாக இது இறைவனின் வாக்குறுதியாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடனும் இந்த வாக்குறுதி இருக்கிறது. இறைவன் தனது தொன்றுதொட்ட நடைமுறையின் மூலம் அனைத்து நபிமார்களிடமும் வாக்குறுதி அளித்துள்ளான்.

அதாவது இறைவன், 'நானும் எனது நபியும் வெற்றி அடைவோம்' என்பதை தீர்மானித்து விட்டான்.

எனவே அஹ்மதிய்யத்தின் வெற்றி, உண்மை இஸ்லாத்தின் வெற்றியாகும். அது நடைபெற்றே தீரும். ஆனால் நாம் தக்வாவில் முன்னேறக்கூடிய மக்களாக இருந்தால் நாம் நமது வாழ்விலேயே இன்ஷா அல்லாஹ் இந்த முன்னேற்றம் மற்றும் வெற்றிகளைப் பார்க்கக்கூடியவர்கள் ஆவோம். தீர்மானிக்கப்பட்ட ஜமாஅத்தின் வெற்றியின் காட்சியினை இன்ஷா அல்லாஹ் நாம் பார்ப்போம். எனவே இந்த காட்சியைப் பார்ப்பதற்கு இந்த வெற்றியினை பார்ப்பதற்கு தனது தக்வாவின் தரத்தை மேம்படுத்திக் கொண்டே செல்வதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்து கொண்டே செல்ல வேண்டும்.

ஜமாஅத்தின் முன்னேற்றம், வெற்றியினைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதுவும் நினைவில் கொள்வதற்கு உகந்ததாகும். அதாவது யாருக்கு முடிவோ அவருக்கே ஆட்சியாகும். இதனைப் பற்றி கூறுகின்றார்கள். உண்மையாளர்கள் அவர்களது முடிவின் மூலம் கண்டறியப்படுவார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: தொடக்கக் காலத்தில் நபிமார்கள் மீது எப்படிப்பட்ட பூகம்பங்கள் வந்ததென்றால் நீண்ட காலம் வரை வெற்றி அடைவதற்கான அடையாளம் தென்படவேயில்லை. பிறகு இறுதியில் இறை உதவியின் தென்றல் வீச ஆரம்பித்தது.

தனது ஜமாஅத்தின் முன்னேற்றம், முடிவு மற்றும் இறைவனின் நற்செய்திகளை இவ்வாறு கூறுகின்றார்கள். இறைவனிடமிருந்து நான் உண்மையான வாக்குறுதியின் நற்செய்திகளைப் பெறுகின்றேன். இதனால் எனது துக்கம் அகன்று போய் விடுகிறது. முற்றிலும் அகன்றுபோய் விடுகின்றது. மேலும் இந்த விசயத்தில் புதிய ஈமான் வருகிறது.

அதாவது ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான முடிவுகளைப் பற்றிய செய்திகளை இறைவன் அன்னாருக்கு வழங்கும் போது, அதனால், எனது உள்ளம் புத்துணர்ச்சி அடைகிறது என்று கூறுகின்றார்கள்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்:

எனக்கு நறுமணம் வருகிறது. இறுதியில் வெற்றி நம்முடையதாகும் இன்ஷா அல்லாஹ். எனவே இந்த முன்னேற்றம், வெற்றி அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தீர்மானிக்கப்பட்டதாகும். நாம் இந்த முன்னேற்றத்தில் பங்கு கொள்வதற்காக தனது தக்வாவின் தரத்தை உயர்த்துவது அவசியமாகும்.

மாநாட்டின் இந்த நாட்களிலும் இன்ஷா அல்லாஹ் சில நாட்களுக்குப் பிறகு ரமலான் வரவிருக்கிறது. அதிலும் முழுமையாக பயன்பெற்றவாறு ஒவ்வொரு அஹ்மதியும் தனது தக்வாவின் தரத்தை மேம்படுத்திக் கொண்டே செல்ல வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதனைப் பெறுவதற்குரிய வாய்ப்பினை வழங்குவானாக! ஒவ்வொருவருக்கும் மாநாட்டின் இந்த நாட்களில் முழுமையாகப் பயன்பெறுவதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! இந்த மாநாட்டுடன் தொடர்புடைய அனைத்து அருள்களையும் நம்மில் ஒவ்வொருவரும் பெறக்கூடியவர்களாவோமாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்காக செய்த துஆக்களுக்கும், ஜமாஅத்தினர்களுக்காக செய்த துஆக்களுக்கும் வாரிசாவோமாக! மாநாட்டு ஏற்பாடுகள் தொடர்பாக சில விசயங்கள் இருக்கின்றன. மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளையும் அமைதியுடன் அனைவரும் கேட்க வேண்டும். வருகை சரியாக இருக்க வேண்டும்.

அறிவு, ஆன்மீக மற்றும் தர்பிய்யத் சம்பந்தமான எந்தவொரு விசயங்களாக இருந்தாலும் சரி, அதனை உங்களுடைய வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

பிறகு மாநாட்டு ஏற்பாடு தொடர்பாக இந்த விசயத்தையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். கலந்து கொள்ளக் கூடியவர்கள், மாநாட்டு அமைப்புடன் எல்லா வகையிலும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அமைப்பாளர்கள், டியூட்டி கொடுக்கக் கூடியவர்கள் விருந்தினர் உபசரிப்பிற்கான உரிமையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இதனைப் போன்று டியூட்டி கொடுக்கக் கூடியவர்களும், கலந்து கொள்ளக் கூடியவர்களும் உங்கள் சுற்றுச்சூழலை கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும்.

அல்லாஹ் அனைவரையும் அனைத்து விதமான தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக! மேலும் அல்லாஹ் எல்லா வகையிலும் இந்த மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT INTERNATIONAL CENTRE, MISSISSAUGA, CANADA.

**ON 06.07.2012**

Translated by : Maulavi N. ZIAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005.

TELEFAX : 0462 - 2352456